IV. GOVERNMENT MOTION

Motion under rule 21 (3) of the Council Rules.

THE HON. THIRU S. MADHAVAN : Mr. Deputy Chairman, Sir, I move—

" That under rule 21 (3) of the Tamil Nadu Legislative Council Rules, item (8), namely, The Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 28 of 1970) under "II—Government Bills" be taken up before item (1)".

DEPUTY CHAIRMAN : The question is—

"That under rule 21 (3) of the Tamil Nadu Legislative Council Rules, item (8), namely, The Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 28 of 1970) under "II—Government Bills" be taken up before item (1)."

The motion was put and carried.

V. GOVERNMENT BILLS

(1) *The Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill*, 1970 (*L.A. Bill No.* 28 *of* 1970)

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : மாண்புமிகு தலைவரவர்களே, சட்டப் பேரவை ஏற்றுக்கொண்டுள்ள தமிழ் நாடு 1970-ஆம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) மசோதா* (சட்டப் பேரவை மசோதா எண் 28—970) பரிந்துரைகள் செய்யப்படுவதற்காக ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று முன் மொழிகிறேன்.

ஜனநாயகம் சிறந்த முறையிலே நம்முடைய தமிழ் நாட்டில் நடைபெறுவதற்காக, சட்டப் பேரவை எதிர்க் கட்சித் தலைவரவர்கள், இந்த அவையின் எதிர்க் கட்சித் தலைவரவர்கள், சட்டப் பேரவை துணைத் தலைவர் அவர்கள், நம்முடைய அரசுக் கட்சிக் கொரடாக்கள், மேலவைத் துணைத் தலைவர் இவர்களுக்கெல்லாம் சில வசதிகள் செய்து தர வேண்டுமென்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் அளித்த வாக்குறுதிப் பிரகாரம், அப்படிப்பட்ட வசதிகள் செய்யப்படுவதன் காரணமாக, அந்த வசதிகளைப் பெறுகின்ற சட்ட மன்ற உறுப்பினர்களெல்லாம் சிறந்த முறையிலே நம்முடைய நாட்டிற்கும் பணியாற்றுவதற்கு வாய்ப்பு இருக்குமென்ற அடிப்படையில் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. சம்பளம் என்ற பெயரளவில் ரூ. 500, வீட்டு வாடகைப்படி ரூ. 100, கன்வேயன்ஸ் அலவன்ஸ் ரூ. 100, கார் வசதி செய்து கொடுத்து, அதற்கு டிரைவர், அந்தக் காரை பழுது பார்ப்பதற்குரிய பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்வது, அவர்களுக்கு உதவியாளர்கள், கடைநிலைப் பணியாட்கள், இவர்களையெல்லாம் கொடுக்க வேண்டுமென்ற விவரங்கள் இந்த மசோதாவில் உள்ளடங்கியிருக்கின்றன. அதேபோல சட்ட மன்றத்திற்குத்

*Printed as Appendix III.